வந்தவாசி பகுதிக்கு சென்றுதான் நிறுத்த வேண்டும். காலையில் டிரிப் எடுத்து மீண்டும் தொகுதிக்குள் வந்து மக்களை ஏற்றிக் கொண்டு செல்கிறார்கள். எனவே என் தொகுதியை மையமாக கொண்டு பெரணமல்லூர் பேரூராட்சியிலே அல்லது சேத்துப் பட்டு பேரூராட்சியிலே மையமாகக் கொண்டுள்ள அந்த இரண்டு இடங்களில் ஏதேனும் ஒரு இடத்தில் பணிமனை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கு ஏற்ப என்று நான் குறிப்பிட்டேன். 6 ஆம் தேதி என்னுடைய மானியக் கோரிக்கை வருகின்றபோது, எந்தெந்த பகுதிகளிலே பணிமனைகள் அமைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 206, திரு. பி.ஆர். எஸ். வெங்கடேசன், திரு. எ. தெய்வநாயகம், இருக்கையில் இல்லை. திரு. செ. து. வரதராஜன் கேட்கி கிறார். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

206—

அரசு பேருந்து கழகத்திற்கு மூதறிஞர் இராஜாஜியின் பெயர்

*14709—திரு. பி.ஆர்.எஸ்.வெங்கடேசன் :

திரு. எ. தெய்வநாயகம் :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) தமிழ்நாட்டிலுள்ள அரசுப் பேருந்துகளில் ஏதாவது ஒன்றை மூதறிஞர் இராஜாஜியின் பெயரில் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தப் பேருந்துக் கழகத்திற்குப் பெயரிடப்பட்டு எப்போது முதல் அமலுக்கு வரும்?

மாண்புமிகு கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத் துறை அமைச்சர் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[1993 ஏப்ரல் 1]

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகத்தில் அன்னை சத்தியா என்றும், தந்தை பெரியார் என்றும், பட்டுக் கோட்டை அழகிரி என்றும் உள்ளதுபோல் எம்.ஜி.ஆர். என்றும், அண்ணா என்றும் இருப்பதற்குப் பதிலாக நம் முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்றும் பேரறிஞர் அண்ணா என்றும் போக்குவரத்துப் பேருந்துகளுக்குப் பெயர் இருந்தால் பொதுமக்கள் மத்தி யிலே மரியாதை இருக்கும். தற்போது இருக்கிற பெயர் களின் காரணமாக ப்வ்வொரு பொதுமக்களும் எம்.ஜி.ஆர். * * அண்ணா * * ஆகவே, தயவுகூர்ந்து பேரறிஞர் அண்ணா அவர்கள் என்றும், புரட்சித் தலைவர் என்றும் பெயர் மாற்றினால் மிக நன்றாக இருக்கும். நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் இதில் ஆவன செய் வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்று இருப்பது சரியல்ல. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மற்றவை இருக்கலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்று தான் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பெயர் சூட்டினார்கள். ஆனால் மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்ற அடிப்படை யிலேதான் அந்த நீளத்திற்குப் பெயரை அமைப்பதால் அந்த சேசிஸ் முழுவதிலுமே பெயர் எழுத வேண்டியிருக் கிறது. ஆகவேதான், அந்தக் குறிப்பிட்ட இடத்திலே எம். ஜி. ஆர். போக்குவரத்துக் கழகம் என்று சுருக்கமாக போடப்பட்டிருக்கிறது. ஆனால் அழைக்கப்படுகிற பேருந்து களுக்கு, அங்கே அனுப்பப்படுகிற கோப்புகளில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். போக்குவரத்துக் கழகம் என்றே பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் என்று குறிப்பிட வேண்டுமென்று சொன்னார்கள். அண்ணா போக்குவரத்துக் கழகத்திலே அண்ணா என்று அழைக்கப் படுவதுதான் சரியாக இருக்கும் என்று முந்தைய ஆட்சிக் காலத்திலும், அதற்குப் பிறகு புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சிக் காலத்திலும், தொடர்ந்து அதுவே அப்படி வருகின்ற காரணத்தினாலே அதை மாற்றுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களுக்கு எல்லாம் ஒவ்வொரு முக்கிய பேருந்துகளுக்கு பெயர் வைத்திருக்கிறோம். ஆனால் தமிழ்நாட்டிலே முதல் தேசியத் தலைவர் என்று பெயர் பெற்றும், இராஜாஜி பெயர் எதற்கோ அனைத்து அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டே வருகிறது. ஆகவே, மூதறிஞர் இராஜாஜியின் பெயரால் ஒரு பேருந்துக் கழகம் அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அரசும் இதுபோல உருவாக்காமல் இல்லை. நம்முடைய சட்டமன்ற வளாகத்திற்குள்ளே இராஜாஜி படம் வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்..(குறுக்கீடு) இல்லை.. இல்லை.. நீங்கள் சொல்வதுபோல் இருக்கிறது. இராஜாஜி மருத்துவமனை என்று இருக்கிறது. பல்வேறு இடங்களிலே அவர் பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக் கழகங்களைப் பிரிக்கின்ற போது எந்தத் தலைவருடைய பெயரை வைத்தால் அது பொருத்தமாக இருக்கும் என்று பின்னாலே பரிசீலிக்கப்படுமே தவிர இன்றைக்கு அதுபற்றி உங்களுக்குக் கூறுவதற்கு சாத்தியக்கூறுகள் இப்போழுது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 207, திரு. ம. சின்னசாமி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

207—

ஆசியா வளர்ச்சி வங்கி மூலம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதி உதவி வழங்கல்

*9039—திரு. ம. சின்னசாமி:

மாண்புமிகு பொது ப்பணித் துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசியா வளர்ச்சி வங்கி (Asian Development Bank) தமிழ்நாடு மின் வாரியத்திற்கு நிதி உதவி வழங்கியுள்ளதா?

(ஆ) இலவச மின்சாரம் வழங்குவதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று ஆசியா வளர்ச்சி வங்கி மாநில அரசைக் கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?